காஞ்சி மாமுனிவர் ஆராய்ச்சி நிறுவனத்தில்

# மரக்கன்று நடும் விழா



லாஸ்பேட்டை காஞ்சி மாமுனிவர் ஆராய்ச்சி நிறுவனத்தில் 'ஒரு செடி- ஒரு உறுதிமொழி' மரக்கன்று நடும் விழாவில் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் மரக்கன்று நட்டார்.

புதுச்சேரி, மே 15: புதுச்சேரி லாஸ்பேட்டை காஞ்சி மாமுனிவர் ஆராய்ச்சி நிறுவனத்தில் 'ஒரு செடி- ஒரு உறுதிமொழி' மரக்கன்று நடும் விழா நேற்று நடந்தது. ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குனர் சசி காந்ததாஸ் தலைமை தாங்கினார்.

விழாவில், காஞ்சி மாமுனிவர் அரசு முதுகலை ஆய்வியல் நிறுவனம் என்.ஐ.ஆர்.எப் (NIRF) தரவரிசையில் 51வது இடத்தை பெற்றுள்ளது. வளாகத்தின் சூழலியல் தன்மையை வலுப்படுத்தும் நோக்கிலும், பொறுப்பான சுற்றுச்சூழல் நடைமுறைகளின் மீதான தனது உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தும் வகையிலும் 'ஒரு செடி- ஒரு உறுதிமொழி' எனும் முன்னெடுப்பு நேற்று துவங்கப்பட்டது.

## ஆட்சியர், டிஜிபி பங்கேற்பு

இதில், புதுச்சேரி வணிக வரித்துறைச் செயலாளர் சவுத்ரி முகமது யாசின் முதல் மரக்கன்றை நட்டு தொடங்கி வைத்தார். தொடர்ந்து, புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன், புதுச்சேரி காவல்துறை டிஜிபி ஷாலினி சிங், புதுச்சேரி என்.சி.சி குழுத் தலைமையகத்தின் குழுத் தளபதியான கர்னல் ஆஷிஷ் திவாரி ஆகியோர் மரக்கன்று நட்டனர்.

மேலும், புதுச்சேரி வனப் பாதுகாவலரான அருள்ராஜன் கலந்து கொண்டு பசுமைப் போர்வையின் முக்கியத்துவத்தை பற்றி வலியுறுத்தினார்.

புதுச்சேரிப் பல்கலைக்கழகத்தின் கல்லூரி மேம்பாட்டுச் சபையின் தலைவர் சுடலை முத்து, தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகத்தின் இயக்குநர் முத்து மீனா, காஞ்சி மாமுனிவர் ஆராய்ச்சி நிறுவன மாணவர்கள், அலுவலகப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

Dinakaran | 15/05/2026 | page. no - 16



லாஸ்பேட்டை, காஞ்சி மாமுனிவர் அரசு பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் மரக்கன்று நடும் பணியை கலெக்டர் குலோத்துங்கன் துவக்கி வைத்தார். அருகில் கல்லூரி முதல்வர் சசிகாந்த தாஸ்.

# 'ஒரு செடி, ஒரு உறுதிமொழி' மரக்கன்று நடும் நிகழ்ச்சி

**புதுச்சேரி, மே 15–**

லாஸ்பேட்டை காஞ்சி மாமுனிவர் அரசு பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவன வளாகத்தில் பசுமைப் பூங்கா அமைக்கும் முயற்சியாக, 'ஒரு செடி, ஒரு உறுதி மொழி' இயக்கத்தின் மூலம் மரக்கன்று நடும் நிகழ்ச்சி நடந்தது.

நிறுவன இயக்குநர் சசிகாந்த தாஸ் தலைமை தாங்கினார். அரசின் வணிக வரித்துறைச் செயலர் சவுத்ரி முகமது யாசின், கலெக்டர் குலோத்துங்கன், போலீஸ் டி.ஜி.பி., ஷாலினி சிங், அரசின் தலைமை வனப் பாதுகாவலர் அருள்ராஜன் ஆகியோர் கலந்து கொண்டு, மரக்கன்று நடும் பணியினை துவக்கி வைத்தனர்.

தொடர்ந்து, பசுமைப் பூங்கா அமைப்பதன் முக்கியத்துவம் குறித்து மாணவர்களுக்கு விளக்கம் அளித்தனர். என்.சி.சி., குழு தலைமையக கமாண்டண்ட் ஆஷிஷ் திவாரி, புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் கல்லூரி மேம்பாட்டுச் சபையின் தலைவர் சுடலைமுத்து, தொழில்நுட்ப கல்வி இயக்குநரகத்தின் இயக்குநர் முத்து மீனா ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

ஆராய்ச்சி நிறுவன பேராசிரியர்கள், மாணவர்கள், அலுவலக ஊழியர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

Dinamalar | 15/05/2024 | page no - 4